வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

முதலாம் தவணைப்பரீட்சை - 2020

தரம் : 11

தகவல் தொடர்பாடல் தொழினுட்ப I

நேரம் : 3 மணித்தியாலங்கள்

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1-40 வரையிலான வினாக்களுக்கு (1) (2) (3) (4) ஆகிய விடைகளில் மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

---

1) தரவு மற்றும் தகவல் பற்றிய சரியான கூற்று.
   A. தகவல் ஒன்றினை பெற தரவு செய்முறைப்படுத்தல் அவசியமாகும்.
   B. தகவலின் பெறுமதியானது நேரத்துடன் நிலைக்கிறது.
   C. இன்றைய வெப்பநிலை என்பது தகவலுக்கான ஓர் உதாரணமாகும்.

   மேற்கூறியவற்றுள் சரியான கூற்று.
   i. A மாத்திரம் ii. A, B மற்றும் C
   iii. A மற்றும் B iv. C மாத்திரம்

2) தரவினை உட்செலுத்த விசைப்பலகை பயன்படுத்தப்பட்ட கணினியின் தலைமுறையானது
   i. முதலாம் தலைமுறைக் கணினிகள்
   ii. இரண்டாம் தலைமுறைக் கணினிகள்
   iii. மூன்றாம் தலைமுறைக் கணினிகள்.
   iv. நான்காம் தலைமுறைக் கணினிகள்.

3) நாளாந்த வாழ்வில் பயன்படுத்தக்கூடிய முறைமைகளுக்கு உதாரணமாக அமையக்கூடியது.
   i. தானியங்கும் காசாள் பொறி (ATM), QR குறிமுறை
   ii. காந்தப் பரிவு விம்பமாக்கற் பொறி (MRI) , கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை கதிர்பொறி (CAT)
   iii. வானொலிச் செய்கை அடையாளமிடுதல் உபகரணம் (RFID), மூடிய சுற்று TV(CCTV)
   iv. கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை கதிர்பொறி CAT), தானியங்கும் காசாள் பொறி (ATM)

4) கீழே தரப்பட்டுள்ள துறைகளில் கணினி வலையமைப்பிலுள்ள கணினியை வலையமைப்பு ஆளியுடன் தொடுப்பதற்கு பயன்படும் துறை யாது?
   i) HDMI துறை ii) RJ45 துறை
   iii) USB துறை iv) VGA துறை

5) பின்வரும் சாதனங்களை கருதுக.
   a.இயக்குபிடி(joystick) b. OMR
   c. ஒளிப்பேனா d. அச்சுப்பொறி
   மேலுள்ளவற்றுள் சுட்டும் சாதனம் மற்றும் வருடி என்பன முறையே
   i) a மற்றும் d ii) a மற்றும் c iii) a மற்றும் b iv) c மற்றும்

6) அழிதகு நினைவகத்திற்கு உதாரணமாக அமையக்கூடியது.
   I)பதுக்கு நினைவகம் ii) நினைவக அட்டை
   iii) தற்போக்கு பெறுவழி நினைவகம RAM iv) நினைவகப் பதிவகம்

7) 173_8 எனும் எண்ம எண்ணுக்கான சமமான பதின்னறும எண்
   (i) 53_{16} (ii) 42_{16} (iii) 63_{16} (iv) $7B_{16}$

8) 27_x "x" ஆனது தரப்பட்ட எண்ணின் அடிப் பெறுமானமாகும். இதற்கு பொருத்தமான எண்முறையாக அமையக்கூடியது.

(i) பதின்ம இரும எண்ம (ii) இரும எண்ம பதின்னறும
iii) பதின்ம இரும பதின்னறும (iv) பதின்ம எண்ம பதின்னறும

9) A–151 B - 10011001_2 C – $8F_{16}$ D - 230_8


மேலே குறிப்பிட்ட A,B,C,D, என்பவை ஏறுவரிசைப்படி முறையே

(i) A , B , C , D (ii) B , C , A , D
(iii) C,A,D,B (iv) B , D , A , C

10) ASCII எண்முறையின்படி "H" எனும் எழுத்தானது இரும இலக்கம் 1001000_2 என்பதனை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. "K" எனும் எழுத்தினை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய இரும இலக்கம்
யாது?

(i) 1110101_2 (ii) 1001101_2 (iii) 1001011_2 (iv) 1101010_2


15) கீழ் தரப்பட்டுள்ள மின் சுற்றில் மூலம் எத்தர்க்க வாயில் காட்டப்பட்டுள்ளது?



(i) AND (ii) NAND (iii) NOT (iv) OR

13) இங்கு தரப்பட்டுள்ள தர்க்கப் படலையை கருதுக. C=1 மற்றும் Q=0 எனின், கீழ் தரப்பட்டுள்ளதில் சரியானது எது?

i. A=0 மற்றும் B=0
ii. A=1 மற்றும் B=0
iii. A=1 மற்றும் B=1
iv. A=0 மற்றும் B=1



14) P,Q,R என்பன ஒரு வினாப்பத்திரத்தில் காணப்படும் 3 வினாக்கள் ஆகும். விண்ணப்பதாரிகள் 2 வினாக்களுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். வினா P ஆனது கட்டாயமானது. விண்ணப்பதாரர்கள் Q மற்றும் R இலிருந்து ஏதாவது ஒரு வினாவினை தெரிவு செய்ய வேண்டும் மேலுள்ள கூற்றுக்கான Boolean கூற்றானது.

i. P AND (Q AND R)
ii. POR(QORR)
iii. P AND (Q OR R)
iv. P OR (Q AND R)

15) பணி செயல்முறைமையில் காணப்படும் பயன்பாட்டு மென்பொருளாக அமையாதது ?

i. வட்டுப் பிரிவிடல் ii. வட்டு வடிவமைத்தல iii. தொகுப்பி iv வட்டுத் துண்டாக்கல்

16) பணி செயல்முறைமை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.

a. பாதுகாப்பு முகாமையானது பணிச் செயல்முறைமையொன்றின் பணியாகும்

b. Android பணிச் செயல்முறைமை அப்பிள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டதாகும்.

c. மீக் கணினியில் பல்பயன்பாட்டு பணி செயல்முறைமை பயன்படுத்தப்படுகிறது

மேற்கூறியவற்றுள் சரியானது

i) a, b மாத்திரம் ii) b, c மாத்திரம் iii) a, c மாத்திரம் iv) a,b,c அனைத்தும்

16) 1TB ற்குச் சமவலுவானது

i. $1*10^6$ MB ii. $1*10^6$ GB

iii. $1*10^6$ KB iv. $1*10^9$ Byte

17) சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளிலும் இலத்திரனியல் விரிதாள் மென்பொருளிலும் காணப்படும் இயல்பு அல்லாதது

i. வரி இடைவெளியை மாற்றுதல் ii. சொற்களைத் தேடுதலும் மாற்றீடு செய்தலும்

iii. அஞ்சல் ஒன்றிணைப்பு iv. எழுத்துப் பிழை திருத்தம்

18) சொல்முறை வழிப்படுத்தல் ஆவணமொன்றில் அச்சிடப்பட்ட சொல் "latter" என்பதனை "letter" ஆக மாற்றீடு செய்ய இலகுவான வழி.

i. Spelling & Grammar ii. Find & Replace

iii. Auto Correct iv. Delete & Retype

19) சொல்முறை வழிப்படுத்தல் ஆவணமொன்றில் "X^2" எனும் icon பயன்படுத்தப்படுவது

i. உள் தள்ளுதல் (Indentation) செய்யலாம்.

ii. மேலொட்டு இடுதல் (Super Script)

iii. எழுத்தின் அளவை பெருப்பித்தல (Grow Font)

iv. வலது நேர்படுத்தல (Right Alignment)

20) இலத்திரனியல் விரிதாள் ஒன்றில் "####" எனும் அடையாளமானது காட்சிப்படுத்தப்படுவதற்கான காரணமாக அமையக்கூடியது.

i. சூத்திரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய வழு

ii. நிரலில் போதுமான அளவு இடைவெளி இன்மை

iii. சூத்திரத்தின் நீளம் அதிகமாக காணப்படல.

iv. மேற்கூறிய எவையுமன்று.

21) கீழ்வரும் அட்டவணையானது சேனா வியாபார நிலையத்தின் பொருட்களுக்கான கழிவினை காட்சிப்படுத்துகின்றது."C001" எனும் பொருளின் கழிவானது "D5" கலத்தினுள் உள்ளடக்கப்படல் வேண்டும் எனின் "D5" கலத்திற்கான சூத்திரம் யாது?

	A	B	C	D	E
1					
2		Sena stors			
3		Discount =			10%
4		Item	Price	Discount	
5		C001	$1,500.00		
6		C002	$3,000.00		
7		C003	$1,250.00		

i. =C5*E3

ii. =C5*E5

iii. =D5*E$3

iv. =C5*E$3

22) பின்வரும் கலமுகவரிகளை கருதுக.

A. E5 B. E5 C. $5E$ D. E$5

மேலே உள்ள கலமுகவரிகளில் சரியானது

i. B ii. B , C

iii. B ,D iv. எவையுமன்று

23) தீனா தனது இலத்திரனியல் நிகழ்த்துகையில் பல்வேறு வகையான எழுத்துக்கள் மற்றும் விவரணங்களை உள்ளடக்கினான் அவன் எழுத்துக்கள் மற்றும் விவரணங்களுக்கு அசைவூட்டங்களை உட்புகுத்த விரும்புகிறானாயின் அவன் அதற்கு கையாளக் கூடிய கருவி யாது?

i. படவில்லை நிலைமாறலல் (Slide transition)
ii. வரைதல் கருவிப்பட்டை (Drawing toolbar)
iii. தனிப்பயன் அசைவூட்டங்கள் (Custom animation)
iv. தளக்கோலம் (Layouts)

24) இலத்திரனியல் நிகழ்த்துகையொன்றில் படவில்லைகளை மீள ஒழுங்கமைப்பதற்கு பயன்படுத்தக்கூடிய கருவி யாது?

i. Normal ii. Slide Show iii. Slide sorter iv. Handout

25) இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளுடன் தொடர்புபட்ட பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?

i. ஒலியுருக்களை உட்செலுத்த முடியும். ஒளியுருக்களை உட்செலுத்த முடியாது.
ii. ஒளியுருக்களை உட்செலுத்த முடியும் ஒலியுருக்களை உட்செலுத்த முடியாது.
iii. ஒலியுருக்கள் ஒளியுருக்களை உட்செலுத்த முடியாது.
iv. ஒலியுருக்கள் ஒளியுருக்களை உட்செலுத்த முடியும்.

26) நிகழ்த்துகையொன்றில் ஒரு வில்லையிலிருந்து இன்னொரு வில்லைக்கு மாறுவதற்கு வழிமுறையாக அமையக்கூடியது.

i. Slide transition ii. Slide layout
iii. Slide design iv. Button

27,28,29வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

Students

Student_ID	Student_Name	DOB
P100	Saratha	1975.12.06
P101	Padmini	1968.06.15
P102	Raja	1964.02.18

Teacher

Teacher_ID	Teacher _Name
D08	Mr.Nimal
D08	Mr. Rathan
D08	Mr. Seelan

27) Teacher அட்டவணைக்கும் Students அட்டவணைக்கும் இடையிலான தொடர்புடைமை யாது?

i. One-to-one தொடர்புடைமை
ii. Many-to-many தொடர்புடைமை
iii. One-to-many தொடர்புடைமை
iv. Many-to-one தொடர்புடைமை

28) Teacher அட்டவணையில் தரவுகளை தேக்கி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள புலங்களின் எண்ணிக்கை

i) 3 ii) 4 iii) 2 iv) 6

29) Doctor அட்டவணையில் தரவுகளை தேக்கி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுகளின் எண்ணிக்கை

i) 3 ii) 4 iii) 2 iv) 6

30) ஒரு பணிப்பாளனின் தனித்துவத்தினை அடையாளப்படுத்துவதற்கு தரவுத்தள முகாமைத்துவ தொகுதி (DBMS) ஒன்றில் பயன்படுத்தக்கூடிய மூலோபாய முறையாக அமைவது

i. Table ii. Query iii. foreign iv. primary key

31) கணினி செய்நிரலாக்கத்தில் சார்புகள் (Function) மற்றும் நடைமுறை (Procedure) தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றாக அமைவது,

i) செய்நிரல் இலகுவாக அமையும்.
ii) திருத்தத்தினை இலகுவாக மேற்கொள்ள முடியும்
iii) மாற்றங்கள் எதுவும் இன்றி அல்லது சிறியதோர் மாற்றத்துடன் பிறிதொரு இடத்தில் பயன்படுத்த முடியும்
iv) மேற்கூறிய யாவும்.

32) நெறிமுறை (algorithm) ஆனது,

i. கணினி மொழி ஒன்றாகும்.
ii. பணிசெயல் முறைமை ஒன்றாகும்
iii. பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் படிமுறையொன்றாகும்.
iv. கணினிக் குறிமுறை ஒன்றாகும்.

33) பின்வரும் தரவு வகைகளினை கருத்திற் கொள்க

A. Byte B. Integer C. Long D. Single E. Double

6.5 , 15 ஆகியவற்றிற்கான தரவு வகையாக அமைவது

(i) A ,B & C,D,E (ii) A ,D & B,C,E
(iii) D ,E & A,C,B (iv) C ,D,E & A,B

34) தரப்பட்டுள்ள போலிக்குறிமுறையின் வெளியீடாக அமையக்கூடியது

```
BEGIN
        P=5
        R=8
If(P>)
        Display P
Else
        Display R
END
```

i. 5
ii. 13
iii. 3. 8
iv. error

35) கீழே தரப்பட்ட While loop எத்தனை தடவைகள் செயற்படுத்தப்படும்

```
Count = 9
While count >=3
Count = Count-2
End while
```

i) 2 ii) 4 iii) 6 iv) 8


36) Var : Array[0..5] of integer என்பது ஒரு அணியாகும். "Var : Array[0..5] of integer" என்பதன் அளவு யாது?

i) 5 ii) 6 iii) 4 iv) மேற்கூறிய எவையுமன்று.

37) 7 + 6 MOD 4 – 20 DIV 3 ஐ பஸ்கால் செய்நிரலைப் பயன்படுத்தி சுருக்கும் போது பெறப்படும் பெறுமானம்.

1) 3 2)-2 3)2 4)5

கீழுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்தைக் கொண்டு 38 மற்றும் 39 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.



38) மேலுள்ள பாய்ச்ற் கோட்டுப் படத்திலுள்ள கட்டுப்பாட்டு கட்டமைப்புக்கள் யாவை?

i) தொடரி மட்டும்
ii) மீள் செயல் மட்டும்
iii) தெரிவு மட்டும்
iv) தொடரிமற்றும் தெரிவு மட்டும்

39) பாய்ச்சற் கோட்டுப் படத்தில் A மூலம் காட்டப்படும் குறியீடு யாது?

i) உள்ளீடு
ii) வெளியீடு
iii) முறைவழியாக்கம்
iv) தீர்மானம்

40) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பொருத்தமற்ற விளைவாகக்கூடியது,

A – கணினி விளையாட்டுக்களுக்கு அடிமைப்படுவதால் தமது கல்வி நடவடிக்கைகளை சீர்குழைத்துக் கொள்ளல்.

B - இணையத்தளத்தைப் பயன்படுத்தி கல்வி தொடர்பான தகவல்களை பதிவிறக்கம் செய்தல்.

C- இணையத்தளத்தில் பொருத்தமற்ற வலைப் பக்கங்களுடன் தொடர்புபடுவதால் மனநிலை பாதிப்படைதல்.

(40 * 1 = 40 புள்ளிகள்)

வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

முதலாம் தவணைப்பரீட்சை - 2020

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	**தரம் : 11**

முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக

1)

i. வவுனியாவிலுள்ள வானிலை மையம் ஒரு மாதத்திற்கு தினசரி மழை மதிப்புகளைப் பதிவு செய்கின்றது.மேற்குறிப்பிட்ட மழைவீழ்ச்சித் தரவைச் செயன்முறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்களுக்கு 2 உதாரணங்கள் தருக??

ii. பதினறுமஎண் E9 ற்குச் சமவலுவான எண்ம எண்ணைத் தருக?

iii. பஸ்கல் மொழியில் இலக்கங்களை வகை குறிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய தரவு வகைகள் (data types) 02 தருக?

iv. புள்ளி அமைவுரு அச்சுப்பொறிக்கும்(dot-matrix printer) லேசர் அச்சுப்பொறிக்கும் (laser printer) இடையிலான வேறுபாடுகள் 02 தருக?

v. முறைமை மென்பொருள் (system software) பிரயோக மென்பொருளுக்கு (application software) உதாரணங்கள் 02 வீதம் எழுதுக?

vi. சாதரண தபாலை விட மின்னஞ்சல் (E-mail) மூலம் கிடைக்கும் நன்மைகள் 02 தருக?

vii. அளவிற்கேற்ப (size) கணணியை வகைப்படுத்தும் 04 வகைகளையும் தருக?

viii. பின்வரும் கூற்றுக்களை கருத்திற் கொள்ளுக.
நெறிமுறையை உரு வடிவத்தில் படிமுறையாக காட்டுதல் 1. .....
நெறிமுறையை ஒரு மொழியை பயன்படுத்தி எழுத்துருவாக காட்டல் 2.....
பொருத்தமான சொற்களை கொண்டு மேலுள்ள இடைவெளிகளை நிரப்புக.
(போலிக்குறிமுறை pseudo code / பாய்ச்சற் கோட்டுப்படம் flowchart)

ix. அட்டவணை A,B யை உமது விடைத்தாளில் பிரதி செய்து அம்புக்குறி மூலம் இணைக்குக.

A	B
தொகுப்பி	மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னரான செய்நிரல்
இலக்கு நிரல் (Object programme)	செய்நிரலின் கூற்றுக்களை ஒன்றன் பின் ஒன்றாக மொழிபெயர்த்தல்
வரி மொழிமாற்றி	மொழிபெயர்ப்பிற்கு பயன்படுத்தக்கூடிய அடிப்படை செய்நிரல்
மூல நிரல (Source programme)	செய்நிரலை ஒரே தடவையில் இயந்திர மொழியாக மாற்றல்

X. பின்வரும் நிரை 1 நிரை 2 அவதானிக்குக .

நிரை 01	நிரை 02
A	ஒரு உள்ளீட்டு கருவியாகும்
B	உலகிலேயே அதி உயர்ஆற்றலும் அதி வேகமானதுமான கணணி
C	கணணியின் அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தக்கூடியது
D	ஒத்திசை சைகைகளாலும் இலக்கமுறை செய்கைகளாலும் இயங்க கூடிய கணணி

A,B,C,D க்கு பொருத்தமான விடையை தெரிவு செய்து எழுதுக
(மீக்கணணி இயக்குபிடி(Joystick) கட்டுப்பாட்டலகு, கலப்பினக்கணணி(Hybrid computer))

(10 * 2 புள்ளிகள் = 20புள்ளிகள்)

2) சாரதா கைமுறை தகவல் முறையை பயன்படுத்தி வியாபாரம் நடாத்தும் ஒரு வியாபாரி.அவர் தனது வியாபாரத்திற்காக இணைய இணைப்புள்ள கணணியை அடிப்படையாக கொண்ட கணணி தகவல் முறையை பயன்படுத்த தீர்மானித்தார்"

i. கைமுறை தகவல் முறையோடு ஒப்பிடுமிடத்து கணணித் தகவல் முறையை பயன்படுத்துவதால் அவருக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக?

ii. புதிய முறைமையின் தேவைகளை இனம்காண தகவலை சேகரிக்க பயன்படுத்தப்படும் வழிகள் இரண்டு தருக?"

iii. தரவு முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்று தருக?

iv. தகவல் முறையை இணையத்திற்கு இணைப்பதன் மூலம் அவர் பெறும் அனுகூலங்களை விபரிக்குக?

v. வியாபார நிறுவனத்தின் ஊழியர்கள் புதிய முறைமையை முதலாவதாக பயன்படுத்தும் படிமுறை முறைமை விருத்தி வாழ்கை ஆயுள் வட்டத்தின் எப்படிமுறையில் எச்சந்தர்ப்பத்திலாகும்?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

3) ஒருவர் தனது பணத்தை மன்னார் NSB வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.அவர் அப்பணத்தை வவுனியாவிலுள்ள NSB வங்கி கிளையில் மீளப்பெற விரும்பினார்.

1. இங்கு பயன்படுத்தப்படும் வலையமைப்பு வகை எது?
2. கணணி வலையமைப்பொன்றை அதன் பௌதிக கட்டமைப்பு (physical layout) அடிப்படையில் வகைப்படுத்துக?.
3. இடத்துரிப்பரப்பு வலையமைப்பு (LAN) பெரும்பரப்பு வலையமைப்பிற்குமிடையிலான (WAN) வேறுபாட்டை விளக்குக.
4. கணணி வலையமைப்பின் நன்மைகள் 02 , தீமைகள் 02 தருக?
5. தரவு ஊடுகடத்தும் ஊடகங்கள் 02 யும் தருக?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

4) பின்வரும் விரிதாளை அடிப்படையாக கொண்டு விடை எழுதுக.

	A	B	C	D	E	F
1	Item	Unit cost (Rs)	Quantity	Total cost (Rs)	Discount	Final cost (Rs)
2	CD	Rs30.00	10	Rs300.00	5%	Rs285.00
3	DVD	Rs50.00	8	Rs400.00		Rs380.00
4	Pen Drive	Rs1,500.00	5	Rs7,500.00		Rs7,125.00
5					Total	Rs7,790.00
6						

1. பொருட்களையும் அதன் விலைகளையும் காட்டுவதற்கு பொருத்தமான வரைபு வகை எது?
2. இறுதி விலையை கணிப்பதற்கு F2 சிற்றரையில் (cell)எழுத வேண்டிய சூத்திரம் யாது?
3. F2 சிற்றரையில் உள்ள சூத்திரத்தை F3 சிற்றரையில் எவ்வாறு பிரதி செய்யலாம்?
4. F5 ல் மொத்த தொகையை (total) கணிப்பதற்கான சூத்திரத்தை எழுதுக?
5. விரிதாள் மென்பொருட்கள் இரண்டு தருக?

(5 * 2 புள்ளிகள் = 10 புள்ளிகள்)

5)

A)கீழ்வரும் பஸ்கால் செய்நிரலின் வெளியீட்டைத் தருக.

```
Var num:array[0..4]of  integer;
Begin
Num[0]:=15;
Num[2]:=18;
Num[4]:=50;
Num[1]:= Num[4]+10;
Num[3]:= Num[0]+ Num[2]
For i=1 to4 do
Write(num[i]);
End.
```

B) கீழே தரப்பட்டுள்ள போலிக்குறிமுறைக்கான பாய்ச்சற்கோட்டுப் படத்தினை வரைக.

```
Begin
Value=A[0]
K=1
Value =[k<=4)
        If A[k]<value Then
                Value=A[k]
        Endif
        K=k+1
Endwhile
        Display value
End.
```

c) மேற்தரப்பட்ட போலிக்குறிமுறையின் வெளியீடு யாது?

(3+4+3 = 10 புள்ளிகள்)

6)

1) 1 தொடக்கம் 10 வரையுள்ள இலக்கங்களை அச்சிடுவதற்கான பாய்ச்சற்கோட்டுப் படத்தை வரைக?
2) வரிமொழிமாற்றி, தொகுப்பி ஆகியவற்றை வேறுபடுத்துக?
3) உயர் மட்டக் கணினி மொழியில் எழுதப்பட்ட செய்நிரல்களின் பண்புகள் யாவை?
4) 3 எண்களின் கூட்டுத்தொகையையும் சராரியையும் காண்பதற்கான பஸ்கால் செய்நிரலை எழுதுக?

(4 *2.5 புள்ளிகள் = 10 புள்ளிகள்)